பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 30 திங்கட்கிழமை 15.09.2025 கதிர் 309

## இது ரகசியம் அல்ல!

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவத்தினர் தவிர பொலிஸாரும் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டார்கள். அவர்களுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு ☞ 2

## அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச பிரச்சினைகள் குறித்து தமிழ் அரசுக் கட்சி சார்பாக ஆளும்தரப்புக்குக் கடிதம்

### ஆலையடிவேம்பில் சுமந்திரன் தெரிவிப்பு





(சகாதேவராஜா)

அம்பாறைமாவட்டதமிழ்பிரதேசங்களில் காணப்படும் காணியுள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பாக ஆளும்தரப்புக்குக் கடிதம் அனுப்பப்படும் என்று கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான சபைகளிலுள்ள கட்சியின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு காணி விடுவிப்பு, கல்முனை வடக்கு பிரதேச செயலகம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், வீரமுனை வரவேற்பு வளையி பெயர்ப்பலகை, கல்முனை மத்தி வலயம், சமகால அரசாங்கத்தின் புறக்கணிப்பு தொடர்பாக பல பிரச்சனைகளை ☞ 2

## ஆளும்தரப்புக்கு தேர்தலைச் சந்திக்கப் பயம் அதனாலேயே மாகாண தேர்தல் இழுத்தடிப்பு

### ஆலையடிவேம்பில் வைத்து சுமந்திரன் கருத்து



(ஷிஹான் பாரூக்)

தேர்தலைச் சந்திப்பதற்கு பயந்துகொண்டு அநுர தரப்பு மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிக்கப்பார்க்கின்றது இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பில் நேற்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கின்றது. ஆனால், இந்த ஆளும்தரப்பு தேர்தலைச்சந்திப்பதற்குப்பயந்துகொண்டு இதனை ☞ 2

## சிறீநேசன் எம்.பி. விபத்தில் காயம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் நேற்று விபத்தில் காயமடைந்தார்.

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடிபிரதேசசெயலகத்துக்கு அண்மையாக அவரின் வாகனமும் கார் ஒன்றும் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நேற்று ஞாயிற்றுக் கிழமை அம்பாறை - ஆலையடிவேம்பில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத் திய குழுக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ☞ 8

## ஊழலை ஒழிப்பதாக்கக் கூறிக்கொண்டு என்பிபியும் அதே பாதையில் பயணம்

### தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

ஊழலை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு ஆளும் தரப்பும் அதே பாதையில் தான் பயணித்துக்கொண்டிருக்கிறது. அரசுக்குச் சொந்தமான லாஃவ் காஸ் நிறுவனத்தின் 50 சதவீதத்துக்கும் அதிக பங்குகளை வர்த்தகர் தம்மிக பெரேராவின் நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது. இதன் மூலம் யாருக்கு நன்மை கிடைக்கவுள்ளது? என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருணாகலில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்த அவர் ☞ 2

## ஆசிரியர்களாகப் பணியாற்றிய அபிவிருத்தி அலுவலர்களை ஓரங்கட்டியது ஆளும்தரப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

அநீதிக்குள்ளாகியுள்ள ஆசிரியர்களாக பணியாற்றிய 16,600 அபிவிருத்தி பணியாளர்களின் உரிமைகளுக்காக நாம் முன்னிற்போம். அரசியல் ரீதியாக இலாபமடைந்த பின் ஆளும்தரப்பு இவர்களை ஓரங்கட்டியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களாக பணியாற்றி வந்த அபிவிருத்திப் பணியாளர்களை நேரில் சந்திக்கச் சென்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநீதிக்குள்ளாகியுள்ள 16,600 ஆசிரியர்களாக பணியாற்றிய அபிவிருத்தி பணியாளர்களின் உரிமைகளுக்காக நான் முன்நிற்பேன். இந்த பிரச்சினையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்தபோது, இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல என ஆளும்தரப்பு கூறியது. கடந்த ஆளும்தரப்பு 2020 ஆம் ஆண்டில் 53,000 ☞ 2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு இந்த வாரத்திற்குள் நீதி அமைச்சரிடம்

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை வரைவு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் இறுதி வரைவு இந்த வாரத்துக்குள் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அந்த குழுவின் தலைவர் சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை வரைவுசெய்வது தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழு, கடந்த தினம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சில் கூடியது. இதன்போது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

புதியசட்டமூலத்தில்இடம்பெறும்பிரச்சினைக்குரிய இடங்களை தொடர்ந்தும் இனம்கண்டுகொண்டு, சட்டமூலத்தை இரண்டாவது தடவையாகவும் ஆராயும் நடவடிக்கை இடம்பெற்றுவருவதுடன் தற்போது அது நிறைவடையும் தருணத்தில் இருக்கிறது.

சட்டமூலம் தொடர்பில் குழு தொடர்ந்து கலந்துரையாடி வருவதுடன், அதன்போது நாளாந்தம் கலந்துரையாடி ☞ 2

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு



திருகோணமலை – அனுராதபுர சந்தியில் நேற்று ஏற்பட்ட விபத்தில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை அனுராதபுர சந்தி விபுலானந்த பாடசாலைக்கு ☞ 2

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அடுத்த மாதம் கட்சிகளுடன் பேச்சு

### துறைசார் அமைச்சர் தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடன் அடுத்த மாதம் முதற்கட்ட பேச்சு நடத்தத் தயாராகவுள்ளோம். சகல தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தலாம் என மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன ☞ 8

## வன்னிப் பாடசாலைகளின் வகுப்பறை கட்டடப் பணிகளை பூர்த்திசெய்ய நிதி

### பிரதமர் ஹரினி உறுதியளிப்பு

வன்னி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாத வகுப்பறை கட்டடங்களினை நிறைவு செய்ய தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதாக பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய உறுதியளித்துள்ளார்.

பிரதமரின் நாடாளுமன்ற அலுவலகத்தில் தொழிலாளர் கட்சியின் வன்னிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினரான காதர் மஸ்தான் மற்றும் பிரதிநிதிகள் சிலர் பிரதமரைச் சந்தித்து வன்னி மாவட்டத்தின் கல்வி ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவர்களும் ஓர் போர்ப் படையணி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டார்கள். பொலிஸாரின் ஒரு பிரிவான சிறப்பு அதிரடிப் படை போர்ப் படையணியாக முன்களத்திலேயே பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பொலிஸார் சட்டம் ஒழுங்கு காவலர்கள் என்ற எல்லையைத் தாண்டி தம்மை அரச கொலை இயந்திரத்தின் ஒரு பகுதியாக எண்ணத் தலைப்பட்டனர். இதன் விளைவு எதுவரையில் சென்றிருக்கின்றது என்பது பச்சாதாபத்திற்குரியது.

இந்தஎண்ணத்தின்விளைவாகதமிழர்கள் பலர் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் கீழ் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்பது கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்கள். இதற்காக நீதிமன்றங்களால் சில பொலிஸ் அதிகாரிகள் தண்டிக்கப்பட்டுமுள்ளார்கள். பொலிஸாரின் இந்த எண்ணப்பாங்கு, அதாவது தாமும் அரச கொலை இயந்திரத்தின் ஒரு பகுதி என்ற எண்ணம் தமிழர்களை மட்டுமல்லாமல் சிங்களவர்களையும் காவு வாங்கியிருக்கிறது என்பது பொலன்னறுவை மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கிய ஒரு வழக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

பொலன்னறுவை பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவரும் மேலும் மூன்று பொலிஸாருமாக ஒருவரை அடித்துச் சித்திரவதை செய்து கொன்றார்கள் என்பதுதான் வழக்கு. இந்த வழக்கில் அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி அவர்களுக்கு 7 ஆண்டுகள் கடுங் காவல் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

கொலைக்கான காரணம்தான் இங்கே முக்கியமானது. பொலிஸார் தம்மையும் கொலைஞர்களாக எண்ணியதன் விளைவு. உலக மது ஒழிப்பு தினம் ஒன்றில் பொலன்னறுவையில் இருந்த ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து மது விநியோகிக்குமாறு கேட்டுள்ளனர் இந்த மூவரும். அவர்களுக்குமதுவிநியோகிக்கஅந்த ஹோட்டல் முகாமையாளர் மறுத்துவிட்டார். இதனால்ஆத்திரமடைந்தபொலிஸார்அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று அடித்துச்சித்திரவதைசெய்துகொன்றுள்ளனர்.

குற்றம்நடந்தநேரத்தில்பொலன்னறுவை பிரதேசஊழல்தடுப்புப்பிரிவில்பணியாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் தயானந்த ரத்நாயக்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஜகத் பிரியந்தபெரேரா குணசேகர மற்றும் மஹிந்த சார்லஸ் ஆகியோரே குற்றவாளிகளாகக் காணப்பட்டுத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் முதல் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்ட பொலன்னறுவை பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவின் அப்போதைய பொறுப்பதிகாரி வசந்த ஹென்றி பெரேரா, விசாரணையின்போதே இறந்துவிட்டார் என்பதால் அவருக்குத் தண்டனை அறிவிக்கப்படவில்லை. மதுவை லஞ்சமாகத் தரவில்லை என்பதற்காக ஒருவரை சித்திரவதை செய்து அடித்துக் கொல்லும் மனோநிலைக்கு வளர்ந்துவிட்ட பொலிஸாரை அந்த இடத்திலிருந்து இறக்கி, அவர்கள் மக்களின் சட்டம் ஒழுங்கு காவலர்கள் மட்டுமே என்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய எந்தவித முறையான பொறிமுறைகளும் போருக்குப் பின்னரான காலத்தில் ஆளும்தரப்புக்களால் முன்னெடுக்கப்படவில்லை. இதனால்தான் குற்றமிழைத்தபடையினரையும்சட்டத்திற்குப் புறம்பான கொலைகளைச் செய்த புலனாய்வாளர்களையும்கூடப் பாதுகாப்பது தமது தலையாய கடமை என்று பொலிஸார் செயற்படும் போக்கு தொடர்கிறது. அநுர ஆளும்தரப்பின் கீழும் பொலிஸாரை இயல்பு நிலைக்கு மீட்டெடுப்பதற்கான எந்தவிதப் பொறிமுறைகளும் செயல் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. பொலிஸார் இப்படியிருக்கும்வரையில்குற்றவாளிகளுக்குக் தண்டனை விலக்களிக்கும் போக்கும் இலங்கையில் தொடரும்.

..........................................

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் ஆலையடி வேம்புக் கூட்டம் சர்ச்சைகள் இன்றி நேற்று முடிவுக்கு வந்தது. தனது பதவிக் காலத்தில் மத்திய செயற்குழுக் கூட்டங்கள் சுமுகமாக நடப்பதை உறுதிசெய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் தலைவர் சிவஞானம் நேற்றைய கூட்டத்தையும் சர்ச்சைகள் இன்றி நடத்தி முடித்துவிட்டார். எல்லாவற்றையும்சமாளித்துக் கட்சியைப் பாதுகாக்கின்றேன் என்று அவர் எடுக்கும்இந்தமுயற்சிஎரிமலைக்குழம்புகளாக அடியில் கொதித்து ஒருநாள் வெடித்துப் பீறிடாத வரைக்கும் சரிதான். அதேபோல் கட்சிக்குள் ஒழுக்காற்று நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தாமல் சமாளிக்கும் அவரது போக்கும் கட்சி ஒரு கட்டுக்கோப்புக்குள் வராமல் இருப்பதைத் தகர்க்காத வரைக்கும் சகிக்கப்படக்கூடியதே.

ஏனெனில்,நேற்றயைகூட்டத்தில்கட்சிஉறுப் பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடு ப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்று ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் கட்சியில் இருந்த பலரும் கட்சி முடிவுகளுக்கு எதிராகச் செயற்பட்டமைக்காக அவர்களிடமிருந்து விளக்கம் கேட்கப்பட்டிருந்தது. அதில் பலர் தமது விளக்கங்களைக் கட்சிக்கு அனுப்பி வைத்திருந்தனர். சிலர் அனுப்பவில்லை. வேறு சிலர் கட்சி அனுப்பிய கடிதத்தையே பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியிருந்தனர். இப்போது இவர்கள் அனைவருக்கும் இரண்டு வருட நன்னடத்தைக் காலம் வழங்குவதற்கு மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. நீதிமன்ற மொழியில் தெரிவித்தால், ஒத்திவைக்கப்பட்ட தண்டனை. இங்கு தண்டனை மட்டும் தீர்மானிக்கப்படவில்லை. என்ன அதிகபட்சம் கட்சியைவிட்டுவெளியேற்றுவதைவிட வேறு பெரிய தண்டனைகள் கிடையாதுதானே! நன்னடைத்தைக் காலத்தில் அவர்களின் நடத்தையைத்தீவிரமாகக்கண்காணிப்பதுடன் அவர்களுக்குக்கட்சியில்எந்தப்பதவிகளையும் கொடுப்பதில்லை என்றும் முடிவு செய்திருக்கிறார்கள். கடிதங்களைப் பெறாது திருப்பி அனுப்பியவர்களுக்கு மீண்டும் கடிதங்களை அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதுதவிரஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்குக் கட்சி அனுப்பிய கடிதத்தின் விளக்கமும் நேற்று மத்திய குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. முக்கியமான தமது கடிதம் ஐ.நா.மனித உரிமைகள் உயராணையருக்கு முகவரியிடப்பட்டு அனுபப்பட்டதல்ல என்பதும் அது பேரவையின் உறுப்பு நாடுகளுக்கே அனுபப்பட்டது என்பதும் அதன் பிரதி ஒன்று பின்னர் உயராணையர் அலுவலகத்திலிருந்து கேட்டகப்பட்டதன் அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்டது என்பதும் விளக்கப்பட்டது. எனவே மற்றைய கட்சிகளும் தரப்புக்களும் மனித உரிமைகள் உயராணையருக்குஅனுப்பியகடிதத்திற்கும் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது என்பதும் விளக்கப்பட்டது. அதனைப் புரிந்துகொண்டு உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடந்துகொள்ளவேண்டும் என்றும்கருத்துக்களைத்தெரிவிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் மீண்டும் வரவுள்ள தீர்மானம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஊழலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

இந்தஆளும்தரப்புஊழல், மோசடிகளுக்கு எதிராககடுமையாகக்குரல்கொடுத்துவருகிறது. லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் இலங் கையில் 80 சதவீத சந்தை வாய்ப்பினைக் கொண்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக லிட்ரோ மற்றும் லாஃவ் நிறுவனங்கள் போட்டியாளர்களாக இருந்து வருகின்றனர். எனவே இவ்விரு நிறுவனங்களும் எரிவாயு விநியோகத்தர்களிடம்சமாந்தரமாகசெயற்பட்டு வந்தனர். ஆனால் தற்போது விலை மனு கோரலில்குளறுபடிகள்ஏற்பட்டுள்ளன. லாஃவ் நிறுவனத்துக்கான எரிவாயு இறக்குமதியில் லிட்ரோ நிறுவனம் தலையிடுகிறது.

கடந்த வாரம் தம்மிக பெரேராவுக்கு சொந்தமான ஒரு நிறுவனத்தினால் லாஃவ் நிறுவனத்தின் 40 சதவீத பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர பங்குச் சந்தையிலும் மேலும் 10 சதவீத பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய லாஃவ் நிறுவனத்தின் 50 சதவீதத்துக்கும் அதிக பங்குகள் தம்மிக பெரேராவின் நிறுவனத்திடம் காணப்படுகின்றன. யாருக்கு நன்மை கிடைப்பதற்காக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? தனவந்தர்களின் அரசியல் இந்த ஆளும்தரப்பின் கீழ் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இது முற்றுமுழுதாக சட்ட விரோத நடவடிக்கையாகும்.

நிறுவனங்களுக்கிடையிலான போட்டித்தன்மை இல்லாமலாக்கப்படும்போது அங்கு ஊழல் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஊழலை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு ஆளும்தரப்பும் அதே பாதையில்தான் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஆளும்தரப்பின் நிறுவனமொன்றின் 50 சதவீதத்துக்கும் அதிக பங்குகளை தம்மிக பெரேராவின் நிறுவனம் கொள்வனவு செய்துள்ளதன் மூலம் யாருக்கு நன்மை கிடைக்கவுள்ளது? இலங்கைக்கு எரிவாயுவை வழங்கவுள்ள ஏனைய போட்டி நிறுவனங்களுக்கு இதன் மூலம் அநீதி இழைக்கப்படும் என்றார்.

## வன்னிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை, அக்கரைப்பற்று நுரைச்சோலை சவூதி அரேபிய வீட்டுத் திட்டம் மற்றும் விடுவிக்கப்படாமல்இருக்கும்குர்ஆன்பிரதிகள் தொடர்பாக கலந்துரையாடியபோதே பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று மஸ்தான் தெரிவித்தார். அவர் இந்தச் சந்திப்புத்தொடர்பில்மேலும்தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு இதுவரை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாத வகுப்பறை கட்டடங்களை நிறைவுசெய்தல்தொடர்பாககடந்தஜூன்மாதம் நடைபெற்ற கல்வி அமைச்சு ஆலோசனைக் குழு கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக பிரதமரிடம் கூறியபோது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் இவ்வருட நிதிகளிலிருந்து வன்னி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு இதுவரை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாத வகுப்பறை கட்டிடங்களினை நிறைவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யவும் உறுதியளித்தார்

அத்துடன் அக்கரைப்பற்று நுரைச்சோலை சவூதி அரேபிய வீட்டுத் திட்டம் தொடர்பாக தாம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவும் நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி இதனை முன்கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

மேலும் விடுவிக்கப்பட்டாமல் சுங்கத்தில் தேங்கி இருக்கும் குர்ஆன் பிரதிகள் தொடர்பாகவும் கலாசார அமைச்சருடன் கலந்துரையாடி அதனை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வார் எனவும் பிரதமர் உறுதியளித்தார்.

வன்னி மாவட்ட கல்வி தொடர்பான கலந்துரையாடல்ஒன்றைவவுனியாவில்நடத்த வேண்டும் என்று கோரிய போது விரைவாக அதற்கான திகதியை அறிவிப்பதாகவும் பிரதமர் உறுதியளித்தார் என்றார்

## ஆளும்தரப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழுத்தடிப்பதாக எமக்குத் தோன்றுகின்றது. இந்தஆளும்தரப்புக்குஏதோவொருவகையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் கிடைத்துவிட்டது.

அரசுத்தலைவர்தேர்தலில்கூடஅநுரகுமார 50சதவீதவாக்குகளைப்பெற்றிருக்கவில்லை. 42 சதவீத வாக்குகளைத்தான் பெற்றிருந்தார். இலங்கையில் முதல் தடவையாக 50 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானவர் அவர்தான். இருந்தாலும் அநுரகுமார ஜனாதிபதியான பிற் பாடு ஒரு அலை ஒன்று உருவானது. அதிலிருந்து ஏதோவொரு அடிப்படையில் மூன்றிலிரண்டுபெரும்பான்மைப்பலம்அவர் தலைமையிலானஆளும்தரப்பிற்குக்கிடைத்து விட்டது. ஆனால், இந்த ஆளும்தரப்பிற்கு தொடக்கத்தில் வாக்களித்த மக்கள்கூட இன்று தாங்கள் பிழையானவர்களைத் தெரிவு செய்துவிட்டோம் என்ற ஒரு மன நிலைக்கு வந்துள்ளார்கள்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த மக்களின் நிலைப்பாடு தெளிவாக விளங்கி இருக்கின்றது. எங்களது கட்சியும்கூட இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எழுச்சி கண்டிருந்தது. எனவேதான் மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட்டு அதில் தோல்வியடைந்து விட்டால் என்ன செய்வது என்று அநுர தரப்பினர் அச்சப்படுகின்றனர். அதனால்தானோஎன்னவோஅந்தத்தேர்தலை நடத்தாமல் இருக்கின்றனர்.

தேர்தலுக்குப்பயந்துதேர்தலில்மக்களுக்கு முகம் கொடுப்பதற்கு பின்வாங்கிக் கொண்டு தேர்தலைப் பிற்போடுவது ஒரு முறையற்ற செயற்பாடாகும் -என்றார்.

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்திக்கொள்ளும் மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு சட்டமூலத்தை வரைவு செய்யும் நடவடிக்கையை, சட்ட வரைவுதிணைக்களத்தினால் மேற்கொண்டு செல்வதாகவும் தலைவர் தெரிவித்தார்.

நீதி அமைச்சில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்ட ஜனரால் அரசுத் தலைவர் சட்டத்தரணி நெரின் புள்ளே, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மேலதிக செயலாளர் பியமுன்தி பீரிஸ், அரசுத் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

## ஆசிரியர்களாகப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தி, அவர்களில் 22,000 பேரை இலவசக் கல்வியை வலுப்படுத்த ஆசிரியர்களாக உள்ளீர்த்தது.

கொவிட்-19 தொற்று நோயின் சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் சிறந்த சேவைகளை முன்னெடுத்திருந்தாலும் அதிகபட்ச வேலைகளை வாங்கிய பின்னர் ஆளும்தரப்பு தற்போது அவர்களை கைவிட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் இருந்தாலும், நேரடியாக இணைத்துக் கொள்ளாது, வழமையான முறைமையின் ஊடாக ஆசிரியர் சேவையில் இணையுமாறு ஆளும்தரப்பு கூறிவருகிறது.

இந்த அனுபவம் வாய்ந்தவர்கள் நடைமுறைப் பரீட்சை எழுதி, தரம் 2.2 க்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு, பின்னர் மூன்று ஆண்டுகளுக்குள் முதுகலை டிப்ளோமாவை பெற பேச்சுக்கள் மூலம் முடிவு செய்துள்ளதாகவும், 2005ஆம் ஆண்டுகூட இந்த வழியில் ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டதால், இப்போதும் அவ்வாறு செய்ய முடியும் என்றும் கூறி அரசியல் ரீதியாக இலாபமடைந்த பின் ஆளும்தரப்பு இவர்களை ஓரங்கட்டியுள்ளது.

இவர்களுக்காக இன்றும் எதிர்காலத்திலும் ஐக்கிய மக்கள் சக்தி முன் நிற்கும். பிரதமரின் அமைச்சரவை யோசனைக்கமைய இளங்கலைப் பட்டம் அடிப்படைத் தகுதியாக உள்ள பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, 50,000 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, தயவுசெய்து இவர்களுக்கு தொழில்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னால் உள்ள வீதிக்கடவையில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நாகேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் சம்பூரிலிருந்து இறப்புச் சடங்கு ஒன்றுக்கு பஸ்ஸில் வருகைதந்து வெள்ளைக் கோட்டின்ஊடாகவீதியைகடக்கமுற்பட்டபோது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த பெண்ணொருவர் அவரை மோதினார் என ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

மூதூர் சம்பூர் பகுதியைச் சேர்ந்தவரான நாகேஸ்வரனுக்கு இறக்கும்போது வயது 71.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தனர்.

அதற்கு பதில் அளிக்கையில் சுமந்திரன், பிரதேசத்தில் நடைபெறுகின்ற அரச நிகழ்வுகளில் எமது கட்சி உள்ளூராட்சி தவிசாளர் உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படைவது குறித்துக் கூறப்பட்டது.

அது குறித்து சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி ஆளும்தரப்பிற்கு அனுப்பவேண்டும். வீரமுனை வளைவு தொடர்பில் நாளை (இன்று) நீதிமன்றத்திற்கு செல்கிறோம். கல்முனை வடக்கு பிரதேச செயலக வழக்கு ஏற்கனவே நீதிமன்றத்தில் உள்ளது. இவையெல்லாம் சட்ட ரீதியாக அணுகப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் தலைவர்களின் சிறப்புரிமைகள் வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷன தெரிவிப்பு

நாட்டில் அரசுத் தலைவரொருவர் ஓய்வுபெற்ற பின்னர் சில சிறப்புரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆனால் அவை வரையறுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால், தேவையானோருக்கு அதனை வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டு;ம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அரசுத் தலைவரொருவர் ஓய்வுபெற்ற பின்னர் சில சிறப்புரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆனால் அவை வரையறுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். தமக்கான சிறப்புரிமைகளை அதிகபட்சமாகப் பயன்படுத்திய முன்னாள் அரசுத் தலைவர்களும் இருக்கின்றனர். எனவே தான் வரையறுக்கப்பட்ட சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால், தேவையானோருக்கு அதற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டு;ம்.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து மக்களுக்கு சுமையைக் குறைப்பதாக ஆளும்தரப்பு கூறினாலும், விரைவில் 7 சதவீதத்தால் மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. மூன்றில் ஒரு மடங்கால் மின் கட்டணத்தை குறைப்பதாகக் கூறி மக்களுக்கு வாக்குறுதியளித்து அவர்களை இந்த ஆளும்தரப்பு ஏமாற்றியிருக்கிறது. உண்மையில் மக்கள் நலன் குறித்து அரசாங்கத்துக்கு அக்கறையிருந்தால் இந்த மின் கட்டண அதிகரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

323 கொள்கலன்கள் பரிசீலனை இன்றி விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு ஆளும்தரப்பு பொறுப்பேற்கவில்லை. ஆனால் அரசாங்கமே அதற்கு அனுமதியளித்ததாக துறைமுக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இதிலிருந்து தப்பிக்க முயற்சிக்காமல் அதற்கான பொறுப்பை ஆளும்தரப்பு ஏற்க வேண்டும். எதிர்க்கட்சிகள் உட்பட யார் கூறுவதையும் கேட்காமல் ஏதேச்சதிகார போக்கிலேயே ஆளும்தரப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத்துக்குள்ளேயே ஆளும்தரப்பு இவ்வாறு செயற்படுகின்றதெனில் அதற்கு வெளியில் எவ்வாறு செயற்படும் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். நாடாளுமன்றத்துக்கு அப்பால் ஜனநாயகத்துக்கு விரோதமாக ஆளும்தரப்பு அடக்குமுறைகளைக் கையாள்கின்றது. அதற்கெதிராக நாம் தொடர்ந்தும் போராடுவோம். அரசியல் ரீதியாக ஏனைய கட்சிகளுடன் கொள்கை ரீதியான முரண்பாடுகள் காணப்பட்டாலும், இவ்வாறான செயற்பாடுகளில் இணைந்து செயற்பட முயற்சிக்கின்றோம் என்றார்.

# சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் சபாநாயகர் குறித்து முறையிடுவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டால் உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பலவிடயங்கள் வெளியாகும் என்று ஆளும்தரப்பு அச்சமடைந்துள்ளது. சபாநாயகரின் ஒருதலைபட்சமான செயற்பாட்டை சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறையிடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு நீதியை பெற்றுத்தருவதாக குறிப்பிட்டே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது.ஆனால் இதுவரையில் உண்மை வெளிப்படுத்தப்படவில்லை.வாக்குறுதிகள் மாத்திரமே மிகுதியாகியுள்ளன.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவின் பெயர் சந்தேகநபராக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட நபர் பாதுகாப்பு பிரதி அமைச்சராக பதவி வகிக்கும்போது குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் எவ்வாறு சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது.

இவ்வாறான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தான் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தோம். போலியான காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகர் புறக்கணித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டால் உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பலவிடயங்கள் வெளியாகும் என்று ஆளும்தரப்பு அச்சமடைந்துள்ளது. வெளியாகும் பல விடயங்கள் அரசாங்கத்துக்கு எதிரானதாகவே அமையும்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் செயற்பாடுகள் ஒருதலைபட்சமானது.நடுநிலையாக செயற்பட வேண்டிய சபாநாயகர் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக ஒரு தலைபட்சமாக செயற்படுகிறார். சபாநாயகரின் ஒருதலைபட்சமான செயற்பாட்டை சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்துக்கு முறையிடுவோம் என்றார்.

# கொள்கலன் விடுவிப்புத் தொடர்பில் விசாரணைகள் நடந்து வருகின்றன

## யாராயிருந்தாலும் நடவடிக்கைதான் என்கிறார் அமைச்சர் சமந்த

ஆளும்தரப்புக்குள் ஊழல், மோசடிகள் இடம்பெற்றாலும் அவற்றுக் கெதிராகவும் நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்கப் போவதில்லை. கொள்கலன் விடுவிப்பு குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் யார் தவறிழைத்திருந்தாலும் அவர்கள் ஆளும்தரப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்படவில்லை. தற்போது ஆரம்ப அடியை எடுத்து வைத்திருக்கின்றோம். இதில் இறுதிவரை பயணிக்க முடியும். நீதிக்கான உண்மையான சுற்றி வளைப்புக்கள் இப்போதுதான் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இதற்காக நடவடிக்கைகள் குறிப்பிட்டவொரு சமூகத்துக்காக மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தற்போது சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் அற்ற தூய்மையான இலங்கையை கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுப்போம். குறுகிய காலத்துக்குள் போதைப்பொருள் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை விடுவிப்போம். தற்போது அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சிகளிடம் எந்த விடயமும் இல்லாததால் கொள்கலன் விடுவிப்பினை பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் யார் தவறிழைத்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆளும்தரப்புக்குள் ஊழல், மோசடிகள் இடம்பெற்றாலும் அவற்றுக் கெதிராகவும் நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்கப் போவதில்லை. மக்கள் வழங்கிய ஆணைக்கமையவே அரசுத் தலைவர்களுக்கான சிறப்புரிமைகள் நீக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகல முன்னாள் அரசுத் தலைவர்களும் இதுவரைக் காலமும் இந்த சலுகைகளை அதியுட்சமாக அனுபவித்திருக்கின்றனர். ஆனால் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அவை தொடர்பில் எந்த எதிர்பார்ப்பும் இன்றி இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

சட்டமா அதிபர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் சபையின் ஆலோசனைகளுக்கமையவே பாதுகாப்பு பிரதி அமைச்சர் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தார். சபாநாயகர் தனித்து இந்த தீர்மானத்தை எடுக்கவில்லை. நியாயமான முடிவையே அவர் எடுத்துள்ளார். அதனை எதிர்க்கட்சிகளால் சகித்துக் கொள்ள முடியாவிட்டால் எம்மால் எதுவும் செய்ய முடியாது. நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தாலும் அதனை எம்மால் இலகுவாக தோற்கடித்திருக்க முடியும் என்றார்.

# 2026 தேசிய பரீட்சை தினங்கள் கல்வி அமைச்சால் அறிவிப்பு

கல்வி அமைச்சினால் 2026ஆம் ஆண்டுக்கான தேசிய பரீட்சைகளுக்கான தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் 2026 பெப்ரவரி 17 முதல் 26 வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் ஒகஸ்ட் 10 முதல் செப்டெம்பர் 5 வரை இடம்பெறவுள்ளது. ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 9 இடம்பெறவுள்ளது. பொதுத் தகவல் தொழிநுட்பப் பரீட்சை ஒக்டோபர் 24 இடம்பெறவுள்ளது. 2026ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைகள் டிசெம்பர் 8 முதல் 17 வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை அரச மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான 2026ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாட்காட்டியையும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான தவணைத் திகதிகளும் குறிப்பிடப்பிட்டுள்ளன. அதற்கமைய புதிய ஆண்டின் முதல் தவணை 2026 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 கி. தங்க பிஸ்கட்டுகளுடன் பாதுகாப்பு அதிகாரி கைது

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சம்பவம்




கட்டுநாயக்க விமான நிலையத்தில் 210 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதிமிக்க தங்க பிஸ்கட்டுகளை காலணிக்குள் மறைத்து, விமானநிலையத்திலிருந்து வெளியே கொண்டுசெல்ல முற்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் அதிகாரி ஒருவர் நேற்றுக் காலை 6.50 மணி அளவில் தங்க பிஸ்கட்டுகளுடன் கைது செய்யப்பட்டார். விமான நிலையத்தில் அமைந்துள்ள ஊழியர்கள் வெளியேறும் வாயிலினூடாக சந்தேகநபர் வெளியேற முற்பட்ட நிலையில் சுங்கப் பிரிவு அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தி பரிசோதித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபரின் காலணிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 51 தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த தங்க பிஸ்கட்டுகளை பட்டியொன்றை பயன்படுத்தி பாதத்துடன் வைத்து இறுக்கமாக கட்டி அதன் மேல் காலுறையை அணிந்திருந்தார் என்று சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட தங்கம் 5 கிலோ 941 கிராம் எடை கொண்டது எனவும் அதன் சந்தைப் பெறுமதி சுமார் 210,524,575.35 ரூபாஎனவும் சுங்க அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சந்தேகநபர் 54 வயதுடைய நீர்கொழும்பு கந்தவ பகுதியைச் சேர்ந்த சிவில் விமான பாதுகாப்பு சேவைகள் அமைப்பின் தலைவராகக் கடமையாற்றிய வருபவர் எனவும் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் குறித்த தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத்தினுள் வைத்து பிறிதொரு நபரிடமிருந்து பெற்றுக்கொண்டு அவற்றை வெளியே கொண்டு வர உதவியிருக்கலாம் எனவும், நீண்டகாலமாக இவ்வாறான குற்றச்செயல்களில் சந்தேகநபர் ஈடுபட்டிருக்கலாம் எனவும் சுங்கப் பிரிவு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் கைதான சந்தேகநபரை நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விமான நிலைய சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருளாதார சீர்திருத்தமே அவசியம்

**தேசிய மக்கள் ஆற்றல் (NPP) ஆளும்தரப்பு ஆட்சியை ஏற்றுக் கொண்டதில் இருந்து இப்போது ஒரு வருட காலம் நிறைவடைய உள்ள நிலையில், 'வாக்குறுதியினை நிறைவேற்றுகிறோம்' என்ற ஆவலுடன் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. கடந்த வாரம், முன்னாள் அரசுத் தலைவர்களின் சலுகைகளை வெட்டிப்போடும் முயற்சி, நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி எளிதில் நிறைவேற்றப்பட்டாலும், அது மக்கள் எதிர்பார்த்த 'முக்கிய சீர்திருத்தம்' இல்லை என்பதே உண்மை. இந்தச் சீர்திருத்தத்தின் மூலம் ஆளும்தரப்பால் சேமிக்க முடியும் தொகை மிகப் பெரியதல்ல. ஒப்பீட்டளவில் அது செல்லாக்காசு.**

**'ராஜபக்சாக்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்', 'ரணிலை விலக்க வேண்டும்' என்ற முழக்கங்களைத் தாண்டி இந்த நடவடிக்கைகளுக்கு எந்தவிதப் பொருளாதாரப் பெறுமானங்களும் இல்லை. அதேநேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகள், ஒய்வூதியங்கள் போன்றவற்றைக் குறைப்பதில் ஆளும்தரப்பு தயக்கம் காட்டி வருகிறது. ஒரு சில முன்னாள் அரசுத் தலைவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வெட்டுவதற்குப் பதிலாக, நூற்றுக்கணக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகளை வெட்டியிருந்தால் அரச நிதிக்கு உண்மையான சேமிப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் அதனைத் தொட ஆளும்தரப்புக்கு இன்னும் துணிவரவில்லை. அதற்கு ஜேவிபிக்குள் இருந்தும் அந்தத் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்புவது ஒரு காரணம்.**

**இது'நல்லாட்சி' என்ற பெயரில் நடந்த ஆளும்தரப்பின்'அரசியல் பழிவாங்கல்' போலவே தெரிகிறது. மேலும், கடந்த காலத்தில் ராஜபக்ச, குமாரதுங்க ஆட்சிகளுடன் கூட்டணி வைத்து நன்மை பெற்றதையே இன்று மறக்கச் செய்ய முயற்சிப்பது தேசிய மக்கள் சக்தியின் தேர்வாகியுள்ளது. அதனால், அவர்கள் கடந்த காலத்தின் உண்மையை மக்கள் மறந்துவிடுவார்கள் என எண்ணுவது மிகப்பெரிய தவறாகும்.**

**இருப்பினும், தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கியது ஒரு குறுகிய ஜேவிபி ஆதரவுக் குழுவிலிருந்து மட்டும் அல்ல. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க வேண்டும் என்ற ஆவலுடன் பல்வேறு தரப்பினரும் இந்த ஆளும்தரப்பிற்கு வாக்களித்தனர். அவர்கள் எதிர்பார்ப்பது சின்னச் சின்ன சலுகை வெட்டலோ, கைது நிகழ்ச்சிகளோ அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் உயிர்ப்பிக்கக் கூடிய திட்டமிட்ட சீர்திருத்தங்களும் நாட்டிலிருந்து சூறையாடப்பட்ட நிதியை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவருவதுமாகும். அவர்களின் முக்கியக் கோரிக்கை.**

**பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிதான்.**

**இலங்கையின் பொருளாதாரம் சற்று நிலைபெற்றாலும் அது உண்மையான மீட்சியிலிருந்து மிகத் தூரத்தில்தான் உள்ளது. சர்வதேச நாணய நிதியம் (IMF) முன்னறிவித்த வளர்ச்சி இலக்குகளை அடைய முடியாமல்போகும் அபாயம் உள்ளது. அதேசமயம், 2028இல் தொடங்கவிருக்கும் கடன் திருப்பிச் செலுத்தும் கடினமான கட்டத்தை எதிர்கொள்வதற்கான தெளிவான திட்டம் இன்றுவரை மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. முந்தைய ஆட்சியில் தொடங்கப்பட்ட கடினமான ஆனால் தேவையான சீர்திருத்தங்கள், இப்போது மெதுவாகவே முன்னேறிக் கொண்டிருக்கின்றன.**

**சில சுற்றுலா துறைகள் மட்டும் சற்று உயிர்ப்பை காட்டினாலும், ஏற்றுமதி துறைகள் இன்னமும் நெருக்கடியில் சிக்கியுள்ளன. நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் (SME) துறை முற்றிலும் சிதைவடைந்து கிடக்கிறது. இதற்கு எந்தத் தெளிவான மீட்புத் திட்டமும் இதுவரை தெரியவில்லை.**

**இத்தகைய சூழலில், ஆளும்தரப்பு முன்னுரிமை கொடுக்க வேண்டியது, அரசியல் நாடகம் அல்ல. மக்கள் வாழ்வில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சீர்திருத்தங்கள்தான். மருந்து விலை, மின் கட்டணம், அத்தியாவசிய பொருட்களின் விலை குறையுமா என்பதே மக்களின் கேள்வி. அந்தக் கேள்விக்கு பதில் அளிக்காத எந்தச் செயலும், "பிரபலத்தைக்" கவர்ந்தாலும், நீண்டகாலத்தில் ஆட்சியை சிதைத்துவிடும்.**

**தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தங்களிடம் உள்ள பெரிய ஆணையையும்பெரும்பான்மையையும்பயன்படுத்திநாட்டின்பொருளாதாரக் கொள்கையை சீரமைத்து முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும். அரசின் துறைகளில் உள்ள சிக்கலான நடைமுறைகள், சிவப்பு நாடா (red tape), அதிகாரிகளின் மெதுவான செயற்பாடுகள் ஆகியவை குறைக்கப்படவேண்டும். வெளிநாட்டு முதலீட்டையும் உள்நாட்டு தொழில்துறையையும் ஊக்குவிக்க எளிமையான நடைமுறைகள் கொண்டுவரப்பட வேண்டும்.**

**அரசியல் பழிவாங்கல், சின்னச் சின்ன கைது நிகழ்வுகள், சலுகை வெட்டல்கள் ஆகியவற்றால் மட்டும் ஆட்சியின் நிலை உறுதியாகாது. உண்மையான மாற்றத்தை காட்டுவது பொருளாதாரத்தில் தான். மக்களின் வீடு, வேலை, வியாபாரம் ஆகியவற்றில் மாற்றம் தெரியவில்லை என்றால், இந்த ஆளும்தரப்பும் முந்தைய ஆளும்தரப்புக்களைப் போலவே மக்கள் "பாடம் புகட்டும்" நிலை வரும்.**

**எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சி ஒரு வருடத்தை நிறைவு செய்யும் இந்தக் காலத்தில், அவர்கள் எந்தப் பாதையைத் தேர்வு செய்கிறார்கள் என்பது மிக முக்கியமானது. நாடகம் நிறைந்த அரசியலைத் தொடர்ந்து செய்வார்களா? அல்லது, மக்கள் எதிர்பார்க்கும் பொருளாதார சீர்திருத்தத்தைத் துணிவுடன் தொடங்குவார்களா?**

**இக்கேள்விக்கான விடைதான் இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.**

# சட்டவிரோத ஜீப் வண்டியுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

சட்ட விரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட இரு சொகுசு ஜீப் வண்டிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மெனிக்ஹின்ன மற்றும் வத்தேகம ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் சனிக்கிழமை (13) கொழும்பு மத்திய குற்றவிசாரணை பணியக அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது வெளிநாட்டிலிருந்து சட்ட விரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட இரு சொகுசு ஜீப் வண்டிகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த ஜீப் வண்டிகளை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து வாகனங்களை பதிவு செய்து பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாகொழும்புமத்தியகுற்றவிசாரணை பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் 38, 58 வயதுடைய மெனிக்ஹின்னமற்றும்வத்தேகமஆகியபகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இதேவேளை சந்தேகநபர்கள் சனிக்கிழமை(13)தெல்தெனியநீதவான்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், இம்மாதம் 15 ஆம் திகதிவரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஒரு குழுவின் வரப்பிரசாதமாக மாறியிருந்த

# அரசுத் தலைவர் நிதியம் இன்று மக்களுக்காகப் பயன்படுகின்றது

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



வரப்பிரசாதம் பெற்ற ஒரு குழுவினரால் அவர்களின்வரப்பிரசாதமாகமாற்றிக்கொண்டிருந்த அரசுத் தலைவர் நிதியம், தற்போதைய ஆளும்தரப்பின் கீழ் நூற்றுக்கு நூறு சதவீதம் மக்களுக்காகப்பயன்படுத்தப்படுகிறது. மக்களுக்கும் ஆளும்தரப்புக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்பட்டுள்ளது. மக்களின் நலன்சார்ந்த வகையிலேயே ஆளும்தரப்பு செயற்படுகிறது என்று பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

2023 (2024) மற்றும் 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்வாங்கும் வகையில், ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களைக் கௌரவிப்பதற்கு அரசுத் தலைவர் நிதியம் எடுத்த தீர்மானத்திற்கு அமைய, சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களைக்கௌரவிப்பதற்கான, மத்திய மாகாண நிகழ்வில் கலந்துகொண்டு நேற்று கண்டி மாவட்ட செயலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார். இதன்போது சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்குப்பிரதமர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

2023 (2024) மற்றும் 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் வாழ்த்து தெரிவித்த பிரதமர், அவர்களுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பானது நாட்டின் எதிர்கால மாற்றத்திற்குத் தேவையான பங்களிப்பையும்தலைமைத்துவத்தையும்பெற்றுத்தரக் காரணமாக அமையும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

அரசுத் தலைவர் நிதியம் பற்றிப் பேசும்போது அது தவறாகப் பயன்படுத்தப்பட்ட விதம் பற்றியே அதிகம் கேள்விப்படுகிறோம். வரப்பிரசாதம் பெற்ற ஒரு குழுவினரால் அவர்களது சலுகைகள் மற்றும் நலன்களை அதிகரித்துக்கொள்ளவே இந்த நிதியம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது. ஆயினும் இன்று அந்த நிலைமை முற்றிலும் மாறி, அரசுத் தலைவர் நிதியம் அதன் உண்மையான நோக்கத்திற்காக அதை 100 சதவீதம் பயன்படுத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிதியம் இப்போது மக்களுக்கு நெருக்கமாகி, மக்கள் தங்கள் பிரதேசத்திலேயே அதனை எளிதாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அதேபோல், மனித வளத்தை மேம்படுத்துவதை ஆளும்தரப்பு தனது முதன்மைப் பணியாக அடையாளம் கண்டுள்ளது. அந்த நோக்கத்துடனேயே நாம் கல்வியில் முதலீடு செய்கிறோம். அந்த முதலீடானது பண ரீதியில் மட்டுமன்றி ஏனைய அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாறிவரும் உலகில் வித்தியாசமான விதத்தில்சிந்திக்கக்கூடிய, ஒருவிடயத்தின் அனைத்துப் பக்கங்களையும் பார்க்கக்கூடிய, உலகத்தை மாற்றக்கூடிய மனிதநேயம் மிக்க குடிமக்களை உருவாக்குவதற்கே நாம் முயற்சிக்கிறோம் - என்றார்.

# புறக்கோட்டை மத்திய பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் இன்று தொடக்கம்

## அரசுத் தலைவர் தொடக்கி வைப்பார்

நாடளாவிய ரீதியில் 50 பேருந்து நிலையங்களை அபிவிருத்திசெய்யும்தேசியகருத்;திட்டத்தின்முதற்கட்டமாக புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் அரசுத் தலைவர் அநுரகுமார இன்று தொடக்கிவைக்கப்படவுள்ளது.

புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தை 60 ஆண்டுகளுக்கு பின்னர் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு 424 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி பணிகள் இலங்கை விமானப்படைக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டு சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த அபிவிருத்தி பணிகளை நிறைவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் 100 தொடருந்து நிலையங்களை நவீனமயப்படுத்தும் கனவு இலக்கு கருத்திட்டத்தின் கீழ் மருதானை தொடருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் இன்று காலை 11 மணியளவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையின் பிரதான போக்குவரத்து ஊடகமாக தொடருந்து சேவை காணப்படுகின்ற நிலையில் பொதுபயணிகள்உட்கட்டமைப்புவசதிகளைமேம்படுத்தும் நோக்கில் மருதானை தொடாருந்து நிலையத்தின் பாரம்பரியத்தை பாதுகாத்து, தொடருந்து நிலையத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் மாத்திரம் கனவு இலக்கு கருத்திட்டத்தின்கீழ்தனியார்துறையினரின்பங்களிப்புடன் நவீனமயப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இந்த அபிவிருத்திப் பணிகள் குறித்துத் தெரிவிக்கையில், "புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையம் 60 ஆண்டுகளுக்கு பின்னரே முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்காக 424 மில்லியன் ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது.பேருந்து நிலையத்தின் கட்டமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்படும். பயணிகளுக்கான ஓய்வறை, தொழில்நுட்ப தகவல் பிரிவு மற்றும் பாதுகாப்பு பிரிவு, சுகாதார வசதிகள் உள்ளிட்ட பல வசதிகள் பேருந்து நிலையத்தில் உள்ளடக்கப்படும்" என்றார்.

# இலங்கையில் மீண்டும் போர் ஏற்படாது என்று கூறமுடியாது

## மகிந்த ராஜபக்ச இப்படித் தெரிவிப்பு

இலங்கையில்மீண்டும்ஒருபோர்ஏற்படாதுஎன்று நிச்சயம் சொல்லமுடியாது என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச. முன்னாள் அரசுத் தலைவர்களுக்கான அரச இல்லத்தில் இருந்து வெளியேறி தங்காலை கால்டன் இல்லத்துக்கு சென்றுள்ள அவர் தனியார் தொலைக்காட்சிசேவைக்குவழங்கியநேர்காணலின் போது இதனைத் தெரிவித்தார்.

அந்த நேர்காணிலில் அவர் தெரிவித்தவை வருமாறு:

கேள்வி–கொடியபோரைமுடிவுக்குகொண்டுவந்து நாட்டை அபிவிருத்தியடைய செய்து, மக்களின் அபிமானத்தைபெற்றதாங்கள், அரசஉத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறி தங்காலை கால்டன் இல்லத்துக்கு வருவீர்கள் என்று நினைத்தீர்களா?

பதில்– எனது வீட்டுக்கு வருவதை காட்டிலும் நிம்மதி ஏதும் உள்ளதா, உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்தாலும் இங்கு வருவதற்கே எண்ணியிருந்தேன். அதுவே எனது விருப்பம்.

கேள்வி –நீங்கள் மகிழ்ச்சியாகவா உள்ளீர்கள்?

பதில் –நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.

கேள்வி – எவ்வாறு பிரச்சினைகளின்போதும் மகிழ்ச்சியாக உள்ளீர்கள்?

பதில் – அது எனது பழக்கம். நான் எதனையும் பிரச்சினையாக கருதவில்லை.

கேள்வி –முன்னாள் அரசுத் தலைவர்கள் தொடர்பில் இந்த ஆளும்தரப்பு இவ்வாறு தீர்மானம் எடுக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

பதில்–இல்லை. ஆனால், சகலதீர்;மானங்களுக்கும் முகங்கொடுக்க தயாராகவே இருந்தேன்.

கேள்வி– ஆளும்தரப்பின் தீர்மானம் தொடர்பில் என்ன நினைக்கி;ன்றீர்கள்?

பதில் – ஆளும்தரப்பு எடுக்கும் தீர்மானங்கள் சரியானதாகவும் இருக்கலாம், பிழையானதாகவும் இருக்கலாம். எமக்கு சரியாக இருக்கும் விடயம் அவர்களுக்கு தவறானதாக இருக்கும்.

கேள்வி – தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ராஜபக்சக்களை பழிவாங்குவதாக குறிப்பிடுகிறார்கள். நீங்கள் என்ன நினைக்கீன்றீர்கள்?

பதில் – ராஜபக்சக்கள் மாத்திரமல்ல ஆளும்தரப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் சகலரும் பழிவாங்கப்படுகிறார்கள். ஆகவே அதுவொன்றும் எமக்கு பெரியதொரு விடயமல்ல,

கேள்வி – எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறு திட்டமிட்டுள்ளீர்கள்?

பதில் – அரசியல் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவோம்.

கேள்வி – மஹிந்த சூறாவளி நாட்டில் மீண்டும் வீசுமா?

பதில் – வீசும், வீசும், மஹிந்த சூறாவளியாக இருக்கலாம், வேறொரு சூறாவளியாகவும் இருக்கலாம்

கேள்வி – உங்களுக்கு அவ்வாறு தெரிகிறதா?

பதில் – ஆம் அவ்வாறு தெரிகிறது

கேள்வி – ஆளும்தரப்பு நாட்டை நிர்வகிக்கும் முறைமை பற்றி என்ன நினைக்கீன்றீர்கள்?

பதில் – அவர்களுக்கு இயலுமான அளவில் நாட்டை நிர்வகிக்கிறார்கள். நாங்கள் அதற்கு அச்சமடையவில்லை. மக்கள் இந்த ஆளும்தரப்புக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே அவர்கள் நாட்டை நிர்வகிக்க இடமளிக்கவேண்டும். ஆளும்தரப்பு தவறான வகையில் செயற்பட்டால் நாட்டு மக்களுக்கு அதனை நாம் எடுத்துக்காட்டவேண்டும்.

கேள்வி–உங்களின்பக்கம்இருந்தவர்கள்கைதுசெய்யப்படுகிறார்களே?

பதில் – ஆளும்தரப்புக்கு எதிரானவர்கள் அனைவரும் கைது செய்யப்படுகிறார்கள். நாங்கள் இதனை எதிர்பார்த்தோம்

கேள்வி – போரை முடிவுக்கு கொண்டுவந்ததையிட்டு இன்று என்ன நினைக்கீன்றீர்கள்?

பதில் – மகிழ்ச்சியாக உள்ளது. பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வரச் சந்தர்ப்பம் கிடைத்த அதிஷ்டமாகக் கருதுகிறேன்.

கேள்வி – நாட்டில் இன்று சர்வதேச தலையீடு உள்ளதாக குறிப்பிடப்படுகிறதே?

பதில் – சர்வதேச தலையீடு என்றும் இருந்தது, இவ்வாறான



தலையீடுகளுக்கு அரச தலைவர்கள் அடிபணியக்கூடாது.

கேள்வி – நாட்டில் மீண்டும் போர் ஏற்படுமா?

பதில் – நான் அவ்வாறு நினைக்கவில்லை. ஆனால் உறுதியாக குறிப்பிட முடியாது. ஏனெனில் விடுதலை புலிகள் அமைப்பு தோற்றம் பெறும் என்று எவரும் நினைக்கவில்லையே,

கேள்வி– நாட்டு மக்களில் ஒரு தரப்பினர்கள் உங்களை கடுமையாக விமர்சிக்கிறார்கள். அவற்றை எவ்வாறு பொறுத்துக்கொள்கின்றீர்கள் ?

பதில் –அரசியலுக்கு வரும்போது அனைத்தையும் தாங்கிக்கொள்ளப் பழகவேண்டும். அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாவிடின் வீட்டில்தான் இருக்கவேண்டும்.

கேள்வி – நாட்டு மக்களுக்கு ஏதும் குறிப்பிட விரும்புகின்றீர்களா ?

பதில் – அரசியல்வாதிகளின் தேவையை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டும்.

கேள்வி – இளைஞர்களுக்கு ஏதேனும் குறிப்பிட விரும்புகின்றீர்களா ?

பதில் – இளைஞர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை அநாவசியமான முறையில் போராடிக் பெற்றுக்கொள்ளக்கூடாது. அவ்வாறு செயற்பட்டால் ஆளும்தரப்பும் அநாவசியமான முறையில் முடக்குவதற்குத் தயாராகும். ஆகவே தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு ஜனநாயக வழிமுறையில் செயற்படுங்கள் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.



நேபாளத்தின் இடைக்கால பிரதமராக முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கி தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் நேபாளத்தின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

நேபாளத்தில் (ஜென் ஸீ) இளைஞர்கள் நடத்திய தீவிர போராட்டங்களால் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு கவிழ்ந்தது. இதனால் அந்நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. நாட்டின் இடைக்கால பிரதமராக யாரை தேர்வு செய்வது என்பது தொடர்பாக தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேபாள ராணுவத் தளபதி அஷோக் சிக்டெல், இது தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொண்டார்.

**ராணுவ தளபதி பேச்சுவார்த்தை:**

நேபாளத்தின் புதிய பிரதமரை தேர்வு செய்வது தொடர்பாக சுமார் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட போராட்டக் குழுக்களுடன் ராணுவ தளபதி அசோக் ராஜ் சிக்டெல் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

நேபாளத்தில் நெப்போ பேபி என்ற பெயரில் வீடியோக்கள் பரவின. அதாவது அந்நாட்டு அரசியல் தலைவர்கள், மூத்த அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள், பிரபலங்களின் வாரிசுகள்



# நேபாள புதிய பிரதமர் இந்தியாவில் கற்றவர்

## ஊழல்களை அகற்றிய நீதிபதி சுஷிலா கார்கி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



தங்களின் ஆடம்பர வாழ்க்கையை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந்தனர்.

இதன் எதிர்விளைவாக பேஸ்புக், யூ ட்யூப் உள்ளிட்ட 26 சமூக வலைதள கணக்குகளை நேபாள அரசு கடந்த 5ம் திகதி முடக்கியது. இதனால் நேபாளம் முழுவதும் போராட்டம் தீவிரமடைந்தது. அந்த நாட்டு நாடாளுமன்றம், உச்ச நீதிமன்றம், அரசு அலுவலகங்கள், பிரதமர், அதிபர், மூத்த அமைச்சர்களின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதுவரை 54 பேர் உயிரிழந்தனர்.

போராட்டம் வலுவடைந்ததால் அதிபர் ராம் சந்திர பவுடால், பிரதமர் சர்மா ஒலி அடுத்தடுத்து பதவி விலகினர். நாட்டின் பாதுகாப்பை ராணுவம் ஏற்று, நேபாளம் முழுவதும் ஊரடங்கை அமல்படுத்தியது. இதன் காரணமாக நேபாளத்தில் தற்போது அமைதி திரும்பி வருகிறது. புதிய பிரதமரை தேர்வு செய்வது தொடர்பாக 12க்கும் மேற்பட்ட போராட்ட குழுக்களுடன் ராணுவ தளபதி அசோக் ராஜ் சிக்டெல் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

நேபாள உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கி, நேபாள மின்சார ஆணையத்தின் முன்னாள் தலைவர் குல் மேன் கிசிங், காத்மாண்டு மேயர் பலேந்திர ஷா, தரன் நகர மேயர் ஹர்கா சம்பாங் உள்ளிட்டோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

சுஷிலா கார்கி அளித்த பேட்டியில், "Gen-Z குழு அரசாங்கத்தை வழிநடத்த என் மீது நம்பிக்கை வைத்துள்ளது. நாட்டின் நலன் கருதி அந்தப் பணியை ஆற்ற நான் தயாராக இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

**இந்தியாவில் கல்வி கற்றவர்:**

ஏற்கனவே அந்நாட்டின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்ற முதல் பெண் என்ற வரலாற்றைக் கொண்டிருந்த சுஷிலா கார்கி தற்போது, அந்நாட்டின் முதல் பெண் பிரதமர் எனும் சிறப்பையும் பெறுகிறார்.

அவர் 1975ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசம் மாநிலம் வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

தற்போது இந்தியத் தலைவர்களால் தான் ஈர்க்கப்பட்டது உள்ளிட்ட வற்றைக் குறித்து மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்ட அவர், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்தை மறக்க முடியாது என்றும் கூறினார். இந்தியாவில் எனக்கு நிறைய நண்பர்கள் உள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் பலரும் என் நினைவில் இருக்கிறார்கள். பல ஆண்டுகள் பழமையான இந்தியாவுடனான உறவு மிகவும் நன்றாக உள்ளது. இந்தியா, நேபாளத்திற்கு நிறைய உதவி செய்துள்ளது. இந்தியர்கள் எப்போதும் நேபாளத்தின் நலம் விரும்புவார்கள்.

இந்தியத் தலைவர்களைப் பார்த்து நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். இந்திய நண்பர்கள் என்னைச் சகோதரியைப் போல்தான் நடத்தினார்கள். பிரதமர் நரேந்திர மோடியைப் பற்றி எனக்கு நல்ல அபிப்ராயம் இருக்கிறது இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.





**பிரதமர் சுஷிலா கார்கி யார்?**

நேபாளத்தில் பிறந்த சுஷிலா கார்கி முதலில் ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கினார். பின்னர் சட்டம் பயின்று வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் பணியாற்றி, 2016ஆம் ஆண்டு நேபாள உச்ச நீதிமன்ற முதல் பெண் தலைமை நீதிபதியாகப் பணியாற்றி வரலாறு படைத்தவர் சுஷிலா கார்கி.

அச்சமற்ற தீர்ப்புகள், ஊழலைப் பொறுத்துக் கொள்ளாததற்காக நேபாள மக்கள் மத்தியில் பெரிதும் அறியப்பட்டவர். ஊழல் குற்றச்சாட்டில் அமைச்சரையே சிறையில் அடைத்தது உள்ளிட்ட முக்கிய வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகள் மூலம் அச்சமற்றவர் என மக்களிடம் பெயர் பெற்றவர்.

இதனால், அரசுடன் கடுமையான மோதலையும் அவர் சந்தித்துள்ளார். 2016ஆம் ஆண்டு தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றதில் இருந்து ஓராண்டுக்குள் அதாவது 2017ஆம் ஆண்டு அவரைப் பதவி நீக்கம் செய்யத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**Gen-Z போராட்டம்:**

"Gen-Z குழு அரசாங்கத்தை வழிநடத்த ஊழலுக்கு எதிராக நேபாளத்தில் இளைஞர்கள் இணைந்து நடத்திய போராட்டம், வன்முறையாக மாறியதால், அந்நாட்டு பிரதமர் சர்மா ஒலி, அதிபர் ராம் சந்திர பவுடல் ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். இதனையடுத்து அங்கு ராணுவம் அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளது.

இதனையடுத்து அமைதி திரும்பியுள்ள நேபாளத்தில், 5,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணொளி வாயிலாகக் கூடி நாட்டின் இடைக்காலத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என விவாதித்தனர்.

தற்போது நேபாள தலைநகர் காத்மாண்டுவுக்கு அருகே சுசிவபுரியில் உள்ள ராணுவ தளத்தில் பதவி விலகிய பிரதமர் சர்மா ஒலி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் போராட்டங்களின்போது தலைநகர் காத்மாண்டு உட்பட பல்வேறு நகரங்களில் உள்ள சிறைகளில் இருந்து 13,000 கைதிகள் தப்பியோடி விட்டனர். இதில் சுமார் 1,400 பேர் மட்டும் பிடிபட்டு உள்ளனர். இந்த சூழலில் நேபாளத்தில் இருந்து இந்தியாவுக்குள் நுழைய முயன்ற 60 கைதிகள் கைது செய்யப்பட்டனர்.

**2026 மார்ச் 4 பொதுத் தேர்தல்:**

நேபாளத்தின் இடைக்கால பிரதமராக நேபாளத்தின் முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கிக்கு இளம் போராட்டக்காரர்கள் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர். இந்நிலையில் நேபாள அதிபர் ராம் சந்திர பவுடல் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியேற்றதும் கார்கி தனது முதல் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார். இந்த கூட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 4 அன்று புதிய பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டது. பொதுத் தேர்தல் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த ஆறு மாதங்களுக்குள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவசரநிலையை அமல்படுத்தவும் கார்கி பரிந்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்












## சிறீநேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில், காயமடைந்த அவர்களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபேரத்ன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து வினவியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அரச அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக அம்சங்களுககு அப்பாற்பட்டது என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம்.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையில் நடத்துவதா என்ற பெரிய பிரச்சினை காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்வுகாணவேண்டும்என்று உயர்நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இருப்பினும் தேர்தலை நடத்தும் நாளை நிச்சயமாகக் குறிப்பிடமுடியாது.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை தொடர்ந்து நிர்வகிக்கும் நிலைப்பாட்டில்ஆளும்தரப்பு இல்லை. பழைய பிரதிநித்துவ முறையிலும் தேர்தலை நடத்த முடியாது, புதிய முறையிலும் தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுகிறது என்பதை அனைவரும் அறிவோம்.

மாகாணசபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டிய அவசியம் காணப்படுகிறது. சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டதன் பின்னர் தாமதமில்லாமல் மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தலை பிற்போடும் நோக்கம் எமக்கு கிடையாது.

மாகாணசபைத் தேர்தல் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடன் அடுத்த மாதமளவில் முதற்கட்ட பேச்சு நடத்தத் தயாராகவுள்ளோம். சகல தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்தால்மாகாண சபைத்தேர்தலைவிரைவாக நடத்தலாம்.பொதுவான கொள்கைக்கு அமைய தீர்மானமொன்றை எடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி15.09.2025இல் வெளியிடப்பெற்றது